ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka
සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

TO BE PUBLISHED IN THE WEBSITE OF DOE

இந்து தர்மாசிரியர் பரீட்சை - 2016 (2018)
Hindu Dharmaciriyar Examination - 2016 (2018)

(01) வேதங்களும் ஆகமங்களும்
The Vedas and Agamas

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

முதலாம் பகுதியில் **முதலாம்** வினாவிற்கும் இரண்டாம் மூன்றாம் பகுதிகளில் இருந்து **இவ்விரண்டு** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக. முதலாம் வினாவுக்கான விடைகளை **இத்தாளிலேயே** எழுதியபின் அதனை வேறாக்கி பகுதி II இன் விடைத்தாளுடன் இணைத்து மேற்பார்வையாளரிடம் கையளிக்குக.

சுட்டெண்..............................

## பகுதி I

- **1.1** முதல் **1.5** வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் **இலக்கத்தை** அடைப்புக் குறிக்குள் எழுதுக.

**1.** 1.1 வேதங்கள் கூறும் சிவனுக்குரிய நாமங்களைக் குறிக்கும் தொகுதி

(1) நீலகண்டன், பிரத்யம்னன், வக்ரதுண்டர், திரிநேத்திரன்
(2) பீமன், உக்கிரன், விஜயன், அனுருத்தன்
(3) உருத்திரன், பசுபதி, சர்வன், ஈசானன்
(4) அரன், சங்கரன், சங்கர்ஷணன், வாசுதேவன்
(5) தேவதேவன், தாணு, உருத்திரன், சம்பு

(..............)

1.2 வேதங்கள் குறிப்பிடும் விண்ணுக்கும் மண்ணுக்கும் நடுவே இடைவெளியைச் சார்ந்த தெய்வங்களைக் குறிக்கும் தொகுதி :

(1) இந்திரன், உருத்திரன், விஷ்ணு, சோமன்
(2) மித்திரன், உஷை, சூரியன், பிரஜாபதி
(3) ராத்திரி, பர்ஜன்யன், சோமன், மருத்துக்கள்
(4) பர்ஜன்யன், மருத்துக்கள், இந்திரன், உருத்திரன்
(5) வருணன், விஷ்ணு, குபேரன், அக்கினி

(..............)

1.3 சிவாகமங்களின் பெயர்களைக் குறிப்பிடும் தொகுதி :

(1) சுப்ரபேதம், பாஞ்சராத்திரம், சுவாயம்புவம், தேவிகாலோத்தரம்
(2) மிருகேந்திரம், பௌஷ்கரம், ரௌரவம், வைகானஸம்
(3) காமிகம், சுப்ரபேதம், கிரணம், மகுடம்
(4) தீப்தம், சிந்தியம், குமாரதந்திரம், மிருகேந்திரம்
(5) அஜிதம், மகுடம், பௌஷ்கரம், வைகானஸம்

(..............)

[ பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka

NOT TO BE USED IN THE INTERESTS OF DOE

1.4 சிவாகமங்களின் கிரியாபாதம் குறிப்பிடும் நான்கு பிரிவுகளின் தொகுதி :

(1) கர்ஷணம்
பிரதிஷ்டை
உற்சவம்
பிராயச்சித்தம்

(2) சரியை
கிரியை
யோகம்
ஞானம்

(3) அன்னப்பிராசனம்
உபநயனம்
தீபாராதனை
உபவாசம்

(4) சம்ஹிதா ஹோமம்
சாந்தி ஹோமம்
திசா ஹோமம்
வாஸ்து சாந்தி

(5) மிருத்சங்கிரகணம்
அங்குரார்ப்பணம்
ரக்ஷாபந்தனம்
நயனோன்மீலனம்

(.............)

1.5 பிராமணங்கள் விரித்துக் கூறும் விடயங்களைக் கொண்ட தொகுதி :

(1) யாகம்
அபிஷேகம்
அலங்காரம்
ஆராதனை

(2) மகோற்சவம்
வாஸ்து சாந்தி
சோமயாகம்
கும்பபூஜை

(3) வேள்வி பற்றிய விளக்கங்கள்
மந்திரம் கிரியை தொடர்பு
கிரியைகளில் தட்சணை
இம்மை மறுமை பேறுகள்

(4) மிருத்சங்கிரகணம்
அபிஷேகம்
ஆசீர்வாதம்
ஆச்சாரிய பூஜை

(5) சோமயாகம்
கணபதி ஹோமம்
அபிஷேகம்
உற்சவம்

(.............)

● **1.6** முதல் **1.10** வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான **சொற்களைக் கொண்டு இடைவெளிகளை** நிரப்புக.

1.6 தெய்வத்திற்குப் பல பெயர்களைக் கூறி வழிபடும் மந்திரங்களைக் கொண்ட வேதம் .................................. ஆகும்.

1.7 பிராமணங்கள் கூறும் விடயங்கள் முழுவதையும் உள்ளடக்கியுள்ள இரு பிரிவுகளாவன
1. .................................................. 2. ..................................................

1.8 பிரமவேதம் என்ற பெயரினைக் கொண்ட வேதம் ........................................................................................ ஆகும்.

1.9 தெய்வங்களுக்கு யாகங்களில் வழங்கப்படும் பங்கைப் பெற உதவும் தெய்வம் ........................................ ........................................ ஆகும்.

1.10 "எமது காதுகளால் நல்லனவற்றையே கேட்போமாக" எனக் குறிப்பிடுவது ........................................................

● **1.11** முதல் **1.20** வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான **விடைகளைப் புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

1.11 இருக்கு வேதம் எடுத்துக் கூறும் வழிபாடு ........................................................................ வழிபாடு ஆகும்.

1.12 வேதத்தில் பாவஞ் செய்தவர்கள் தம் குறையைப் பொறுக்கும்படி வேண்டி நிற்கும் தெய்வம் ....................
........................................................................................................................................

1.13 "தாய், தந்தை, குரு, விருந்தினர் ஆகியோரைத் தெய்வமாகக் கருதுக" என்ற அறிவுரை இடம்பெறும் உபநிடதம்
........................................................................................................................................

1.14 ஆலயத்தில் இறைவன் திருவுலா வரும் போது உயிரினங்களுக்குக் கிடைக்கும் தீட்சை ............................
........................................ தீட்சையாகும்.

[ பக். 3 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka

1.15 சிவனது அருவுருவத் திருமேனியாக விளங்குவது ........................................................................ ஆகும்.

1.16 நமச்சிவாய என்ற மந்திரம் முதன் முதல் இடம்பெறும் வேதம் ......................................................................

1.17 தட்சணாமூர்த்தி வடிவத்தின் முன்பக்க வலக்கை காட்டி நிற்கும் முத்திரை ........................................... ஆகும்.

1.18 சாம வேதம் கொண்டு விளங்கும் இரு பிரிவுகளாவன :

(1) ..................................................................................................................................................

(2) ..................................................................................................................................................

1.19 நான்கு ஆச்சிரமங்களில் ஆரண்யகத்திற்குரிய ஆச்சிரமம் ....................................................................
என்பது அறிஞர் கருத்து

1.20 வைணவ ஆகமங்களாகச் சிறப்பிக்கப்படும் இரு ஆகமங்களாவன

(1) ..................................................................................................................................................

(2) ..................................................................................................................................................

*(01 × 20 = 20 புள்ளிகள்)*

* *

Department of Examinations, Sri Lanka

Department of Examinations, Sri Lanka

ශ්‍රී ලංකා විභාග ... / முழுப் பதிப்புரிமையுடையது] / All Rights Reserved]

TO BE PUBLISHED IN THE WEBSITE OF DOE

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

இந்து தர்மாசிரியர் பரீட்சை - 2016 (2018)

Hindu Dharmaciriyar Examination - 2016 (2018)

(01) வேதங்களும் ஆகமங்களும்

The Vedas and Agamas

- II ஆம், III ஆம் பகுதிகளுக்கான விடைகளை உமக்குத் தரப்படும் விடைத்தாளில் எழுதிப் பகுதி I இன் விடைத்தாளுடன் இணைத்து மேற்பார்வையாளரிடம் கையளிக்குக.
- ஒவ்வொரு பகுதியிலிருந்தும் இவ்விரண்டு வினாக்களைத் தெரிவு செய்க.

## பகுதி II

2. மேல்வரும் விடயங்கள் தொடர்பாக வேதங்கள் கூறும் கருத்துக்களை விளக்குக.
   (i) கல்வி
   (ii) குடும்பவாழ்வு
   (iii) ஒழுக்கம் பற்றிய சிந்தனைகள்
   (iv) சமய நம்பிக்கைகள்

   *(20 புள்ளிகள்)*

3. உபநிடதங்கள் இந்து தத்துவ சிந்தனை மரபினை வளம்படுத்தியவாற்றை மேல்வரும் தலைப்புக்களில் ஆராய்க.
   (i) உபநிடதங்களில் பிரமம் ஆன்மா பற்றிய சிந்தனைகள்
   (ii) முக்திக்கான வழிமுறைகள்
   (iii) பிற்காலத் தத்துவக் கோட்பாடுகளின் உருவாக்கத்திற்கு அவற்றின் பங்கு

   *(20 புள்ளிகள்)*

4. "சமயத்தையும் தத்துவத்தையும் ஒன்றிணைத்த பெருமைக்குரியவர் இராமானுஜர்."
   இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

   *(20 புள்ளிகள்)*

5. திருமூலரினால் "மெய்யாம் இறைவன் நூல்" எனப் போற்றப்பட்ட ஆகமங்கள் இந்து சமய வரலாற்றில் பெறும் சிறப்பினை விளக்கிக் கூறுக.

   *(20 புள்ளிகள்)*

## பகுதி III

6. "இந்து சமயச் சடங்குகளின் வரிசையில் திருமணச் சடங்கு மனிதனது இல்லற வாழ்வை வளம்படுத்துகின்றது."
   இக்கூற்றினை ஆராய்க.

   *(20 புள்ளிகள்)*

7. "சைவ சித்தாந்த தத்துவ வளர்ச்சியில் ஆகமங்களின் பங்கு அளப்பரியது."
   இக்கூற்றினைப் பரிசீலிக்குக.

   *(20 புள்ளிகள்)*

8. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற சிந்தனை மரபில் ஆலய வழிபாட்டின் மகத்துவத்தினையும் பயன்களையும் விளக்கிக் கூறுக.

   *(20 புள்ளிகள்)*

9. மேல்வருவனவற்றுள் எவையேனும் நான்கு பற்றிச் சிறுகுறிப்புகள் எழுதுக.
   (i) இருக்கு வேதம் போற்றும் அக்கினி
   (ii) கடோபநிடதம்
   (iii) ஆலய வழிபாட்டில் திருமுறை பாராயணம்
   (iv) மகா சிவராத்திரி
   (v) சாமவேதம்
   (vi) அபிஷேகம்

   *(04 × 5 = 20 புள்ளிகள்)*

***

Department of Examinations, Sri Lanka

Department of Examinations, Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

TO BE PUBLISHED IN THREE LANGUAGES

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

இந்து தர்மாசிரியர் பரீட்சை - 2016 (2018)
Hindu Dharmaciriyar Examination - 2016 (2018)

(02) சமய ஞானிகளும் சமயப் பெரியார்களும்
Saints and Leaders of Religious Movements

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

முதலாம் பகுதியில் முதலாம் வினாவிற்கும் இரண்டாம் மூன்றாம் பகுதிகளில் இருந்து இவ்விரண்டு வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக. முதலாம் வினாவுக்கான விடைகளை **இத்தாளிலேயே** எழுதிய பின் அதனை வேறாக்கி பகுதி II இன் விடைத்தாளுடன் இணைத்து மேற்பார்வையாளரிடம் கையளிக்க.

சுட்டெண்...............................

## பகுதி I

- **1.1** முதல் **1.5** வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

**1.** 1.1 இருக்குவேத ரிஷிகள் அடங்கும் தொகுதி :

(1) உத்தாலகர், மைத்திரேயி, வாமதேவர், வியாசர்
(2) வசிட்டர், அத்திரி, கண்வர், கார்க்கி
(3) விசுவவாமித்திரர், மைத்திரேயி, கார்க்கி, வாமதேவர்
(4) கிருஸ்தமர், உத்தாலகர், வாமதேவர், பாரத்துவாசர்
(5) சுவேதகேது, கிறிஸ்தமர், உத்தாலகர், பாரத்துவாசர்

(..............)

1.2 அருணகிரிநாதர் இயற்றிய நூல்கள் அடங்கும் தொகுதி :

(1) திருப்புகழ், கந்தரலங்காரம், காசிகலம்பகம், திருவகுப்பு
(2) மயில்விருத்தம், கந்தரனுபூதி, கந்தரந்தாதி, திருப்புகழ்
(3) கந்தரனுபூதி, வேல்விருத்தம், மதுரைக்கலம்பகம், பராபரக்கண்ணி
(4) கந்தரந்தாதி, திருப்புகழ், வேல்விருத்தம், ஆகாரபுவனம்
(5) திருவகுப்பு, கந்தரந்தாதி, நீதிநெறி விளக்கம், ஆகாரபுவனம்

(..............)

1.3 ஆரிய சமாஜத்தின் மூன்று கொள்கைகள் உள்ள தொகுதி :

(1) உருவ வழிபாட்டு மறுப்பு, வேதங்களுக்கு உயர்ந்த மரியாதை, தீண்டாமை ஒழிப்பு
(2) அவதார நம்பிக்கை, தீண்டாமை ஒழிப்பு, பெண்ணுரிமை
(3) பெண்ணுரிமை, சாதிவேறுபாடு, விக்கிரக மறுப்பு
(4) உருவ வழிபாடு, தீண்டாமை ஒழிப்பு, சமய ஒற்றுமை
(5) சமஸ்கிருதக் கல்வி, உருவ வழிபாடு, பெண்ணுரிமை

(..............)

[ பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka

TO BE PUBLISHED IN THE WEBSITE OF DOE

1.4 மத்துவரின் துவைத வேதாந்தம் கூறும் கோட்பாடுகள் கொண்ட தொகுதி :

(1) பேதவாதம்
பன்மைவாதம்
விவர்த்தவாதம்

(2) பன்மைவாதம்
சத்காரியவாதம்
பிரதிவிம்பவாதம்

(3) சடஈஸ்வரபேதம்
அவச்சேதவாதம்
பன்மைவாதம்

(4) ஜீவஈஸ்வரபேதம்
பன்மைவாதம்
பிரதிவிம்பவாதம்

(5) பன்மைவாதம்
பேதவாதம்
சத்காரியவாதம்

(............)

1.5 இராமானுஜர் கூறும் விசிட்டாத்துவைதக் கோட்பாடுகள் அடங்கும் தொகுதி :

(1) சரீரசரீரிவாதம்
ஒருமைவாதம்
பேதவாதம்

(2) பன்மைவாதம்
சரீரசரீரிவாதம்
கடவுள்

(3) சடஈஸ்வரபேதம்
அவச்சேதவாதம்
பன்மைவாதம்

(4) ஜீவஈஸ்வரபேதம்
பன்மைவாதம்
பிரதிவிம்பவாதம்

(5) பன்மைவாதம்
பேதவாதம்
சத்காரியவாதம்

(............)

● **1.6** முதல் **1.10** வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான **சொற்களைக் கொண்டு இடைவெளிகளை** நிரப்புக.

1.6 "மனிதனுள் ஏற்கனவே புதைந்து கிடக்கும் தெய்வீகத்தை வெளிக்கொணர்வதே கல்வி" எனக் கூறியவர் ..........................................................................................

1.7 சத்திய சோதனை என்னும் நூலை எழுதியவர் :..............................

1.8 "இராமசரிதமானஸ்" என்ற பக்தி இலக்கிய நூலை ............................................ இயற்றினார்.

1.9 திருக்கேதீஸ்வரத் திருப்பணிச் சபையின் முதலாவது தலைவராகவிருந்த ஈழத்துச் சைவப் பெரியார் ................................................

1.10 வேதங்களை அருளியவர்களை ................................................ என அழைப்பர்.

● **1.11** முதல் **1.20** வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான **விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

1.11 ஆதிகவி எனச் சிறப்பித்துக் கூறப்படும் கவிஞர் யார்? ..........................................

1.12 கபீர்தாஸர் எவ்வெவ் மதங்களுக்கிடையே சமரச நோக்கைக் கண்டவர்? ..............................

1.13 பிரார்த்தன சமாஜம் என்னும் இயக்கத்தைத் தோற்றுவித்தவர் யார்? ..............................

1.14 ஏழைகளுக்குச் செய்யும் சேவை நாராயணனுக்கான வழிபாடு என்னும் வகையில் "தரித்திர நாராயணன்" என்ற சொல்லை உருவாக்கியவர் எவர்? ..........................................

1.15 கணவன் இறந்ததும் மனைவி உடன்கட்டை ஏறும் வழக்கத்தை ஒழிப்பதற்காக சட்டம் உருவாவதற்கு முன்னின்று உழைத்த அறிஞர் யார்? ..........................................

1.16 விசிட்டாத்துவைத தத்துவம் உருவாவதற்கு இராமானுஜர் இயற்றிய பாஷ்யத்தின் பெயர் என்ன? ..........................................................................................

1.17 "பிரமம் ஒன்றே உண்மைப் பொருள் மற்றைய யாவும் நிலையற்றவை" என்று கூறிய தத்துவவாதி யார்? ..........................................................................................

1.18 ஐந்து வயது வரை ஊமையாக இருந்து முருகன் திருவருளால் வாய் பேசத் தொடங்கிய அருளாளர் யார்? ..........................................................................................

1.19 இராமாயணத்தை இந்தி (ஹிந்தி) மொழியில் பாடிய அருளாளர் யார்? ..............................

1.20 இந்து மதத்திற்குப் பாரதத்தில் வழங்கப்பட்ட பெயர்கள் யாவை? ..............................

*(01 × 20 = 20 புள்ளிகள்)*

✻✻

[ பக்.3 ஐப் பார்க்க

இங்கு வெட்டுக - இத்தாளில் எழுதுதல் ஆகாது

Department of Examinations, Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

இந்து தர்மாசிரியர் பரீட்சை - 2016 (2018)

Hindu Dharmaciriyar Examination - 2016 (2018)

(02) சமய ஞானிகளும் சமயப் பெரியார்களும்
Saints and Leaders of Religious Movements

- II ஆம், III ஆம் பகுதிகளுக்கான விடைகளை உமக்குத் தரப்படும் விடைத்தாளில் எழுதிப் பகுதி I இன் விடைத்தாளுடன் இணைத்து மேற்பார்வையாளரிடம் கையளிக்குக.
- ஒவ்வொரு பகுதியிலிருந்தும் இவ்விரண்டு வினாக்களைத் தெரிவு செய்க.

## பகுதி II

**2.** இந்து தர்மம் பற்றிய சிந்தனையில் மகாபாரதத்திற்குரிய இடத்தினை மேல்வரும் விடயங்களின் அடிப்படையில் விளக்குக.

(i) நூலாசிரியரும் பணிகளும்
(ii) நூலின் அமைப்பு
(iii) தர்மம் பற்றிய கருத்துக்கள்
(iv) இந்துக்களிடையே மகாபாரதத்தின் செல்வாக்கு *(20 புள்ளிகள்)*

**3.** ஆதிசங்கரரின் அத்வைதக் கோட்பாட்டினை மேல்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.

(i) சங்கரர் பற்றிய அறிமுகம்
(ii) அத்வைதம் கூறும் பிரம்மம்
(iii) அத்வைதத்தில் ஆன்மக் கோட்பாடு
(iv) விடுதலையும் அதற்கான வழியும் *(20 புள்ளிகள்)*

**4.** பிரம்மசமாஜத்தின் சமய சமூகப் பணிகளை மேல்வரும் தலைப்புக்களின் அடிப்படையில் ஆராய்க.

(i) பிரம்மசமாஜத்தின் நோக்கம்
(ii) சமயப் பணிகள்
(iii) சமூகப் பணிகள் *(20 புள்ளிகள்)*

**5.** இராமகிருஷ்ண பரமஹம்சரின் சர்வமத சமரசம் பற்றி மேல்வரும் தலைப்புக்களில் விளக்குக.

(i) இராமகிருஷ்ண பரமஹம்சரின் வாழ்க்கைச் சுருக்கம்
(ii) அவரின் சர்வமத சமரசக் கொள்கை
(iii) உலக சமாதானமும் சர்வமத சமரசக் கொள்கையும் *(20 புள்ளிகள்)*

## பகுதி III

**6.** நாவலரின் சைவசமயப் பணிகளை விளக்குக. *(20 புள்ளிகள்)*

**7.** "அருணகிரிநாதர் முருக வழிபாட்டை எழுச்சிபெறச் செய்த பெரும் அருளாளர்"
இக்கூற்றை ஆராய்க. *(20 புள்ளிகள்)*

**8.** தாயுமான சுவாமிகளின் சமய சமரசக் கோட்பாட்டைத் தெளிவுபடுத்துக. *(20 புள்ளிகள்)*

**9.** மேல்வரும் சமயாசாரியர்களுள் எவரேனும் இருவர் இந்துசமய மேம்பாட்டிற்கு ஆற்றிய பணிகள் பற்றிக் குறிப்புரை எழுதுக.

(i) துளசிதாசர்
(ii) சைதன்யர்
(iii) மத்துவர்

*(10 × 2 = 20 புள்ளிகள்)*

* * *

Department of Examinations, Sri Lanka

Department of Examinations, Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

TO BE ... IN THE WEBSITE OF DOE

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

இந்து தர்மாசிரியர் பரீட்சை - 2016 (2018)
Hindu Dharmaciriyar Examination - 2016 (2018)

(03) சைவசமய வரலாறு
History of Saivism

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

முதலாம் பகுதியில் **முதலாம்** வினாவிற்கும் இரண்டாம் மூன்றாம் பகுதிகளில் இருந்து **இவ்விரண்டு** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக. முதலாம் வினாவுக்கான விடைகளை **இத்தாளிலேயே** எழுதிய பின் அதனை வேறாக்கி பகுதி II இன் விடைத்தாளுடன் இணைத்து மேற்பார்வையாளரிடம் கையளிக்க.

சுட்டெண்:....................................

## பகுதி I

**1.● 1.1** முதல் **1.5** வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் **இலக்கத்தை** அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1.1 சிவ ஆகமங்களின் பெயர்கள் அடங்கிய தொகுதி

(1) காமிகம், சிந்தியம், காரணம், சுப்ரபேதம்
(2) காமிகம், விஜயம், கிரணம், சுப்ரபேதம்
(3) காரணம், மகுடம், கிரணம், வீரம்
(4) விமலம், மகுடம், சிந்தியம், லளிதம்
(5) சிந்தியம், விஜயம், மகுடம், வீரம் (............)

1.2 அகச் சமயப் பிரிவுகளின் பெயர்கள் அடங்கிய தொகுதி

(1) மாவிரதம், வாமம், பாசுபதம், பேதவாத சைவம்
(2) பாடாணவாத சைவம், பேதவாத சைவம், சிவாத்துவித சைவம், சிவசமவாத சைவம்
(3) பாசுபதம், சிவசமவாத சைவம், மாவிரதம், வீரசைவம்
(4) பேதவாத சைவம், காஸ்மீர சைவம், மாவிரதம், சமணம்
(5) சிவசமவாத சைவம், பாசுபதம், பௌத்தம், சமணம் (............)

1.3 சைவ நாற்பாதங்களின் பெயர்கள் அடங்கிய தொகுதி

(1) பக்தி யோகம், ஞானயோகம், கர்மயோகம், சிவயோகம்
(2) சரியை, கிரியை, யோகம், ஞானம்
(3) சரியை, பக்தியோகம், ஞானயோகம், தாசமார்க்கம்
(4) கிரியை, ஞானம், சற்புத்திரமார்க்கம், பக்தியோகம்
(5) ஞானம், கர்மயோகம், தாசமார்க்கம், சிவயோகம் (............)

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka

TO BE ... IN THE ... OF DOE

1.4 தன்மாத்திரைகளின் பெயர்கள் அடங்கிய தொகுதி

(1) ஒளி
ஊறு
ஓசை
நாற்றம்

(2) சுவை
நாற்றம்
மெய்
வாய்

(3) சுவை
ஒளி
ஊறு
ஓசை

(4) ஊறு
நாற்றம்
வாய்
ஓசை

(5) ஓசை
மெய்
வாய்
கண்

(............)

1.5 சிவபெருமானின் முகங்களின் பெயர்கள் அடங்கிய தொகுதி

(1) சத்தியோஜாதம்
வாமதேவம்
தாமசம்
அதோமுகம்

(2) தற்புருடம்
அகோரம்
இராசதம்
வாமதேவம்

(3) சாத்விகம்
தாமசம்
இராசதம்
ஈசானம்

(4) ஈசானம்
தற்புருடம்
அகோரம்
வாமதேவம்

(5) ஈசானம்
அகோரம்
வாமதேவம்
அதோமுகம்

(............)

● **1.6** முதல் **1.15** வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புக.

1.6 வட இந்தியாவில் விளங்கிய சைவம் .............................. என்று அழைக்கப்படும்.

1.7 வீர சைவத்தின் அடிப்படை நூல் .............................. ஆகும்.

1.8 சிவனின் நூறு நாமங்களைக் குறிப்பிடும் வேதம் .............................. ஆகும்.

1.9 உண்மை விளக்கத்தின் ஆசிரியர் .............................. ஆவார்.

1.10 சோழர்காலச் சிவாலயங்களுள் அதிஉயர்ந்த விமானத்தை உடைய கோயில் .............................. ஆகும்.

1.11 பஞ்ச பூதத்தலங்களுள் அப்பு தலம் என போற்றப்படுவது .............................. ஆகும்.

1.12 சிவன் என்ற சொல்லுக்கு .............................. என்பது பொருளாகும்.

1.13 இருள்மலம் என்று கூறப்படுவது .............................. ஆகும்.

1.14 திருமூலர் இயற்றிய நூல் .............................. ஆகும்.

1.15 .............................. என்பது தூல பஞ்சாட்சரம் எனப்படும்.

Department of Examinations, Sri Lanka

TO BE ... IN
THE ... OF DOE

● **1.16** இல் இருந்து **1.20** வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான **விடைகளைப் புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

1.16 சந்தானாச்சாரியர் **இருவரின்** பெயர்களைத் தருக.

(1) ........................................................ (2) ........................................................

1.17 தசகாரியங்களுள் **மூன்றின்** பெயர்களைத் தருக.

(1) ........................................................ (2) ........................................................

(3) ........................................................

1.18 உமாபதி சிவாசாரியர் அருளிய **இரண்டு** நூல்களின் பெயர்களைத் தருக.

(1) ........................................................ (2) ........................................................

1.19 ஒன்பதாந் திருமுறையில் இடம்பெறும் **இரண்டு** நூல்களின் பெயர்களைத் தருக.

(1) ........................................................ (2) ........................................................

1.20 கன்மமலத்தின் குணங்கள் **இரண்டின்** பெயர்களை எழுதுக.

(1) ........................................................ (2) ........................................................

*(01 × 20 = 20 புள்ளிகள்)*

* *

Department of Examinations, Sri Lanka

[ பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka

1386

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

TO BE ... IN THE ...

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

இந்து தர்மாசிரியர் பரீட்சை - 2016 (2018)
Hindu Dharmaciriyar Examination - 2016 (2018)

(03) சைவசமய வரலாறு
History of Saivism

- II ஆம், III ஆம் பகுதிகளுக்கான விடைகளை உமக்குத் தரப்படும் விடைத்தாளில் எழுதிப் பகுதி I இன் விடைத்தாளுடன் இணைத்து மேற்பார்வையாளரிடம் கையளிக்குக.
- ஒவ்வொரு பகுதியிலிருந்தும் இவ்விரண்டு வினாக்களைத் தெரிவு செய்க.

## பகுதி II

**2.** சைவ சித்தாந்தம் கூறும் வினைக்கோட்பாடு பற்றி மேல்வரும் தலைப்புகளில் விளக்குக.
- (i) வினை உண்மை
- (ii) மூவகை வினைகள்
- (iii) இருவினையொப்பு

*(20 புள்ளிகள்)*

**3.** சேர் பொன்னம்பலம் இராமநாதன் சைவ சமய வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகளை மேல்வரும் தலைப்புகளில் ஆராய்க.
- (i) கோயிற் பணி
- (ii) கல்விப் பணி
- (iii) சமூகப் பணி

*(20 புள்ளிகள்)*

**4.** பல்லவர் காலத்திற் சைவசமயம் சிறந்து விளங்கியதற்கு நாயன்மார்களும் அரசர்களும் ஆற்றிய பணிகளை மேல்வரும் தலைப்புகளில் ஆராய்க.
- (i) திருஞானசம்பந்தரின் சமயப் பணி
- (ii) திருநாவுக்கரசரின் சமுதாயப் பணி
- (iii) பல்லவ மன்னர்களின் கோயிற் பணி

*(20 புள்ளிகள்)*

**5.** மேல்வருவனவற்றுள் எவையேனும் நான்கினைப் பற்றிக் குறிப்புகள் எழுதுக.
- (i) சதருத்திரியம்
- (ii) அருணந்திசிவாச்சாரியார்
- (iii) திருமந்திரம்
- (iv) திருக்கோணேச்சரம்
- (v) சிவசின்னங்கள்

*(20 புள்ளிகள்)*

## பகுதி III

**6.** குப்தர் காலத்தில் விளங்கிய சைவசமயம் பற்றி ஆராய்க. *(20 புள்ளிகள்)*

**7.** வீர சைவத்தின் தோற்றம், வளர்ச்சி என்பவற்றை விபரிக்குக. *(20 புள்ளிகள்)*

**8.** ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரது சைவசமயப் பணிகளை விபரிக்குக. *(20 புள்ளிகள்)*

**9.** காம்பூச்சியாவில் காணப்படும் சைவப் பண்பாட்டுக் கூறுகளை விளக்குக. *(20 புள்ளிகள்)*

***

Department of Examinations, Sri Lanka

Department of Examinations, Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

# இந்து தர்மாசிரியர் பரீட்சை - 2016 (2018)
# Hindu Dharmaciriyar Examination - 2016 (2018)

## (04) பன்னிரு திருமுறைகள்
## The Twelve Thirumurais

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

முதலாம் பகுதியில் முதலாம் வினாவிற்கும் இரண்டாம் மூன்றாம் பகுதிகளில் இருந்து இவ்விரண்டு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக. முதலாம் வினாவுக்கான விடைகளை இத்தாளிலேயே எழுதிய பின் அதனை வேறாக்கி பகுதி II இன் விடைத்தாளுடன் இணைத்து மேற்பார்வையாளரிடம் கையளிக்க.

சுட்டெண்..............................

### பகுதி I

1. 1.1 முதல் 1.5 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1.1 சிவனின் திருநாமங்கள் :

(1) சுவாமிநாதன்
சேனாதிபதி
கடம்பன்

(2) லம்போதரன்
ஐங்கரன்
மூத்தநாயனார்

(3) கங்காதரன்
சந்திரசேகரன்
திரிபுராந்தகன்

(4) ஆதித்தியன்
திவாகரன்
கதிரவன் (..............)

1.2 சோழர் காலப்பகுதியில் கோயில்களில் நடனமாடிய பெண்கள் :

(1) பாடினி
விறலி
கணிகை

(2) தலைக்கோலி
நாடக மகளிர்
ஆடல்மகள்

(3) தளிச்சேரிப் பெண்டுகள்
பதியிலார்
தேவரடியார்

(4) நர்த்தகி
கோயிற்பிணாக்கள்
மதனிகை (..............)

1.3 சேரமான் பெருமாள் நாயனார் இயற்றிய நூல்கள் :

(1) ருதுசங்காரம்
ரகுவம்சம்
குமாரசம்பவம்

(2) அற்புதத்திருவந்தாதி
மூத்த திருப்பதிகம்
திருவிரட்டை மணிமாலை

(3) திருத்தொண்டத் தொகை
திருத்தொண்டர் திருவந்தாதி
திருத்தொண்டர் புராணம்

(4) திருவாரூர் மும்மணிக்கோவை
பொன்வண்ணத்தந்தாதி
திருக்கைலாய ஞான உலா (..............)

1.4 மாணிக்கவாசகரது வரலாறு கூறும் புராணங்கள் :

(1) திருமுறைகண்டபுராணம்
கோயிற்புராணம்
வாயுபுராணம்

(2) திருவுந்தரகோசமங்கைப் புராணம்
திருப்பெருந்துறைப் புராணம்
திருவிளையாடற் புராணம்

(3) திருவானைக்காப்புராணம்
பவிஷ்யபுராணம்
பிரம்மகைவர்த்த புராணம்

(4) அக்கினி புராணம்
பிரமாண்ட புராணம்
நாரதீய புராணம் (..............)

[ பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka

TO BE PUBLISHED IN THE WEBSITE OF DOE

1.5 முருக வழிபாடு பற்றிச் சிறப்பித்துக் கூறியவர்கள் :

(1) தாயுமானவர்
சிவப்பிரகாசர்
நக்கீரர்

(2) கச்சியப்பர்
குமரகுருபரர்
அருணகிரிநாதர்

(3) அபிராமிபட்டர்
சேக்கிழார்
கபிலதேவர்

(4) காளிதாசர்
பரணர்
வள்ளலார் (..............)

- **1.6** முதல் **1.15** வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புக.

1.6 அங்கமும் வேதமும் ஓதுநாவர் என்ற பாடலின் பண் .................................................... ஆகும்.

1.7 குங்குலியக் கலய நாயனார் சோழநாட்டில் .................................................... என்ற ஊரில் அவதரித்தார்.

1.8 சம்பந்தர் புனல்வாதத்தின் போது ஆற்றில் விட்ட ஏட்டில் எழுதிய பாடல் .................................... .................................... என்பதாகும்.

1.9 பதினொராந் திருமுறையில் இடம்பெறும் மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலையைப் பாடியவர் .................................................... ஆவார்.

1.10 இடபாருடர் என்ற பெயர் குறிக்கும் அர்த்தம் .................................................... ஆகும்.

1.11 சோழர் காலப் பகுதியில் கோயில்களில் ஓதுவார்களை மேற்பார்வை செய்ய நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் .................................................... என்று அழைக்கப்பட்டார்.

1.12 "விடக்குடம்பின் உட்கிடப்ப ஆற்றேன்" என்று பாடியவர் .................................................... ஆவார்.

1.13 சுந்தரர் இறையருளாற் பெற்ற பொன்னை மணிமுத்தா ஆற்றில் இட்டு .................................... குளத்திற் பெற்றார்.

1.14 திருஞானசம்பந்தருடன் தலங்கள் தோறும் சென்று பாடல்களுக்கு இசை வகுத்தவர் .................................... ஆவார்.

1.15 திருத்தொண்டத் தொகையில் சுந்தரரினால் மிகவும் பாராட்டப்பட்ட பல்லவப் பேரரசன் .................................... ஆவார்.

- **1.16** முதல் **1.20** வரையில் தரப்பட்டுள்ள வினாக்களில் "அ" பகுதிக்குப் பொருத்தமானதை "ஆ" பகுதியில் இருந்து தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் இடுக.

| | "அ" பகுதி | | "ஆ" பகுதி | |
|---|---|---|---|---|
| 1.16 | "ஊரெல்லாம் துஞ்சி" | (1) | திருத்தாண்டகம் | (..........) |
| 1.17 | "நீதியாய் நிலனாகி" | (2) | மாணிக்கவாசகர் | (..........) |
| 1.18 | "அறிவானுந்தானே அறிவிப்பான்" | (3) | சேரமான்பெருமாள் | (..........) |
| 1.19 | பண்ணும் பதமேழும் | (4) | காரைக்கால் அம்மையார் | (..........) |
| 1.20 | முன்னைப்பழம் பொருட்கும் | (5) | திருஞானசம்பந்தர் | (..........) |

*(01 × 20 = 20 புள்ளிகள்)*

* *

[ பக். 3 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / All Rights Reserved]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

TO BE PUBLISHED IN THE WEBSITE OF DOE

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

இந்து தர்மாசிரியர் பரீட்சை - 2016 (2018)

Hindu Dharmaciriyar Examination - 2016 (2018)

(04) பன்னிரு திருமுறைகள்

The Twelve Thirumurais

- II ஆம், III ஆம் பகுதிகளுக்கான விடைகளை உமக்குத் தரப்படும் விடைத்தாளில் எழுதிப் பகுதி I இன் விடைத்தாளுடன் இணைத்து மேற்பார்வையாளரிடம் கையளிக்குக.
- ஒவ்வொரு பகுதியிலிருந்தும் இவ்விரண்டு வினாக்களைத் தெரிவு செய்க.

## பகுதி II

**2.** "ஈறாய் முதல் ஒன்றாய்" - திருவீழிமிழலைப் பதிகம்

(i) இப்பாடலை எழுதிப் பொருள் தருக.

(ii) இப்பாடலின் பண் யாது?

(iii) பாடலிற் கூறப்படும் முக்குணங்களும் அவற்றின் இயல்புகளும் எத்தகையவை?

(iv) இப்பாடற் பொருளை சைவசித்தாந்தக் கருத்துக்களுடன் தொடர்புபடுத்தி விளக்குக.

*(20 புள்ளிகள்)*

**3.** "கூற்றாயினவாறு" - திருநாவுக்கரசர் பாடல்

(i) இப்பாடலை வரி அமைப்புடன் எழுதிப் பொருள் தருக.

(ii) இப்பாடல் பாடப்பட்ட தலம், பண் என்பவற்றைக் குறிப்பிடுக.

(iii) இப்பாடல் பாடப்பட்ட சந்தர்ப்பத்தைக் கூறுக.

(iv) இப்பாடலைத் துணைக் கொண்டு நாவுக்கரசரது வாழ்க்கையில் இடம்பெற்ற துன்பங்களையும், பின் செய்த தொண்டுகள் அற்புதங்களையும் குறிப்பிடுக.

*(20 புள்ளிகள்)*

**4.** "தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" - திருத்தொண்டர் தொகைப்பாடல்

(i) இதனைப் பாடியவர் யார்? இதன் பண் யாது?

(ii) இப்பாடலை எழுதிப் பொருள் தருக.

(iii) அடியார் வழிபாட்டின் சிறப்பினைக் கூறுக.

(iv) திருமுறை இலக்கிய வளர்ச்சிக்குத் திருத்தொண்டர் தொகையின் பங்கு எத்தகையது?

*(20 புள்ளிகள்)*

**5.** "முத்திநெறி அறியாத" - அச்சோப் பதிகம்

(i) இப்பாடலை எழுதிப் பொருள் தருவதோடு அது எத்தனையாம் திருமுறையில் தொகுக்கப்பட்டுள்ளது என்பதையும் கூறுக.

(ii) பக்தி நெறியின் சிறப்பினை எடுத்துரைக்குக.

(iii) பழவினைகள், அவற்றின் நீக்கம், முத்திநெறி பற்றி விளக்குக.

(iv) திருவருளின் சிறப்புப் பற்றி எடுத்துரைக்குக.

*(20 புள்ளிகள்)*

## பகுதி III

**6.** திருமந்திரம் கூறும் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு சைவசித்தாந்தக் கருத்துக்களை விளக்குக.

*(20 புள்ளிகள்)*

**7.** கண்ணப்பரது பக்தியின் சிறப்பினை விளக்குக. *(20 புள்ளிகள்)*

**8.** இறைவழிபாட்டில் பண்ணிசையின் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்துக. *(20 புள்ளிகள்)*

**9.** மேல்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு குறிப்புரை எழுதுக.

(i) திருமுருகனது உருவப் பொலிவு பற்றிய திருமுருகாற்றுப்படை விளக்கம்

(ii) சேந்தனாரது திருப்பல்லாண்டு

(iii) பெரிய புராணம் போற்றும் பெண்கள் மூவரின் தொண்டு

(iv) குங்கிலியக் கலய நாயனார்

(v) கோயில்களின் வளர்ச்சியில் மன்னர்களின் பங்கு

*(2 × 10 = 20 புள்ளிகள்)*

* * *

Department of Examinations, Sri Lanka

Department of Examinations, Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

# இந்து தர்மாசிரியர் பரீட்சை - 2016 (2018)
# Hindu Dharmaciriyar Examination - 2016 (2018)

## (05) கோயில்களும் கலைகளும்
## The Art and Architecture of the Hindu Temple

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

முதலாம் பகுதியின் முதலாம் வினாவிற்கும் இரண்டாம் மூன்றாம் பகுதிகளில் இருந்து இவ்விரண்டு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக. முதலாம் வினாவுக்கான விடைகளை இத்தாளிலேயே எழுதிய பின், அதனை வேறாக்கி பகுதி II இன் விடைத்தாளுடன் இணைத்து மேற்பார்வையாளரிடம் கையளிக்க.

சுட்டெண்.................................

### பகுதி I

1. ● 1.1 முதல் 1.5 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றிலொன்று ஏனையவற்றோடு பொருந்தாது. அவ்வாறு பொருந்தாத விடயத்தின் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள அடைப்புக் குறிக்குள் எழுதுக.

1.1 (1) மானசாரம் (2) மயமதம்
(3) காஸ்யபம் (4) பிருகத்தேசி
(5) சுப்பிரபேதாகமம் (.........)

1.2 (1) க்ஷத்திரிய சிம்மேஸ்வரம் (2) முகுந்தேஸ்வரம்
(3) தர்மராஜ ரதம் (4) இறவாதான் ஈஸ்வரம்
(5) வீரட்டானேஸ்வரம் (.........)

1.3 (1) வாதாபி (2) பட்டதகல்
(3) ஐஹொளே (4) கா்ஜுராஹோ
(5) ஆலம்பூண்டி (.........)

1.4 (1) நகுலேஸ்வரம் (2) திருக்கேதீஸ்வரம்
(3) முன்னேஸ்வரம் (4) பொன்னம்பலவாணேஸ்வரம்
(5) தான்தோன்றீஸ்வரம் (.........)

1.5 (1) திருவையாறு (2) இராமேஸ்வரம்
(3) திருவிடைமருதூர் (4) மூவர் கோயில்
(5) திருவானைக்கா (.........)

● 1.6 முதல் 1.10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் சரியான விடையின் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள அடைப்புக் குறிக்குள் எழுதுக.

1.6 பரிவார தேவர் கோயில் மூலவர்களில் அடங்காதது:
(1) தக்ஷிணாமூர்த்தி (2) விநாயகர்
(3) துர்க்கை (4) குமாரக்கடவுள்
(5) வைரவர் (.........)

1.7 சோழர் காலக் கோயிற் கட்டட அமைப்பின் எல்லா அம்சங்களையும் பெற்ற கோயில்
(1) அரிஞ்சிகை - ஈஸ்வரம் (2) தஞ்சைப் பெருவுடையார் கோயில்
(3) சிதம்பரம் (4) வானவன்மாதேவி - ஈஸ்வரம்
(5) கங்கைகொண்ட சோழேஸ்வரம் (.........)

[ பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka

1.8 பல்லவர் காலத்துச் சாந்தாரக் கோயில்
(1) கணேஸரதம் (2) லலிதாங்குரம்
(3) திருவதிகை வீரட்டானம் (4) பனைமலைக் கோயில்
(5) காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயில் (.........)

1.9 ஓவியக் கலை பற்றி விளக்கும் நூல்
(1) மானசாரம் (2) வான்மீகி இராமாயணம்
(3) விஷ்ணு தர்மோத்திரம் (4) அவிக்ஞான சாகுந்தலம்
(5) கூத்தநூல் (.........)

1.10 அஜந்தா ஓவியங்களுக்கு மூலமான நூல்கள்
(1) மகாபுராணங்கள் (2) பௌத்த ஜாதகக் கதைகள்
(3) சமணரின் சாந்திபுராணம் (4) காவியங்கள்
(5) கதாசரித சாகரம் (.........)

- **1.11** முதல் **1.20** வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புக.

1.11 இந்தியாவில் அமைக்கப்பட்ட மலைகளில் ........................................................... அமைந்திருக்கும் கைலாசநாதர் கோயில் கலைவனப்பிலும் அளவுப் பிரமாணங்களிலும் முதன்மையானது.

1.12 நாட மந்திர் என்பது ........................................................... தேசத்துக் கோயில்களின் நிருத்த மண்டபமாகும்.

1.13 தமிழகத்தில் உள்ள (1) ........................................................... (2) ........................................................... என்னும் கோயில்களில் சிவதாண்டவத்தின் 108 கரணங்களும் சிற்பக் கோலத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

1.14 மூன்றாம் குலோத்துங்க சோழன் திரிபுவனத்தில் அமைத்த கோயில் .............................................. என்னும் பெயரால் வழங்கும்.

1.15 (1) ........................................................... (2) ........................................................... என்பன நாட்டியம் பற்றிய தமிழ் நூல்கள் ஆகும்.

1.16 யக்ஷகானப் பாயலாடா என்பது ........................................ தேசத்திற்குச் சிறப்பாகவுள்ள நாட்டியக் கலையாகும்.

1.17 கோயில்களில் உபசாரமாக நாட்டியம் புரிந்தவர்களை ........................................................... என்று தமிழ்க் கல்வெட்டுகள் குறிப்பிடும்.

1.18 திராவிடக் கலைப்பாணியின் உன்னதக் கோலமான விமானம் காணப்படுவது ........................................................... ........................................ இல் ஆகும்.

1.19 இருபதாம் நூற்றாண்டிலே புனரமைக்கப்பட்ட பொழுது சமய குரவர் நால்வரின் கோட்டமும் இராசராசனின் சிற்பமும் அமைக்கப்பட்ட ஈழத்துக் கோயில் ........................................................................................................... ஆகும்.

1.20 (1) ........................................................... (2) ........................................................... (3) ........................................ ........................................ ஆகியோரைக் கர்நாடக சங்கீதத்திற்கு வடிவங் கொடுத்தவர்களாகக் கொள்வர்.

*(01 × 20 = 20 புள்ளிகள்)*

* *

[ பக். 3 ஐப் பார்க்க

Department of Examinations, Sri Lanka

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

# இந்து தர்மாசிரியர் பரீட்சை - 2016 (2018)
# Hindu Dharmaciriyar Examiantion - 2016 (2018)

## (05) கோயில்களும் கலைகளும்
## The Art and Architecture of the Hindu Temple

- II ஆம் III ஆம் பகுதிகளுக்கான விடைகளை உமக்குத் தரப்படும் விடைத்தாளில் எழுதிப் பகுதி I இன் விடைத்தாளுடன் இணைத்து மேற்பார்வையாளரிடம் கையளிக்குக.
- ஒவ்வொரு பகுதியிலிருந்தும் இவ்விரண்டு வினாக்களைத் தெரிவு செய்க.

### பகுதி II

**2.** பல்லவர் காலக் கட்டடக் கலையின் வளர்ச்சியினை மேல்வரும் தலைப்புகளின் அடிப்படையிற் சுருக்கமாக விளக்குக.
- (i) குகைக்கோயில்கள் *(06 புள்ளிகள்)*
- (ii) மலைதளிகள் *(06 புள்ளிகள்)*
- (iii) கற்றளிகள் *(08 புள்ளிகள்)*

**3.** மேல்வரும் சிற்ப வடிவங்கள் பற்றிச் சுருக்கமாக விளக்குக.
- (i) தக்ஷிணாமூர்த்தி *(04 புள்ளிகள்)*
- (ii) நடராஜர் *(08 புள்ளிகள்)*
- (iii) கிராதார்ஜுனர் *(04 புள்ளிகள்)*
- (iv) பூவராகர் *(04 புள்ளிகள்)*

**4.** கதகளி நடனங்களின் பொதுப் பண்புகளை மேல்வரும் அம்சங்களின் அடிப்படையில் விளக்குக.
- (i) மூலக்கதைகள் *(07 புள்ளிகள்)*
- (ii) அரங்கம் *(06 புள்ளிகள்)*
- (iii) அலங்கார ஒப்பனைகள் *(07 புள்ளிகள்)*

**5.** தமிழர் சமுதாயத்தில் மேல்வரும் கருவிகள் மூலமாக இசைக்கலை வளர்ந்தவாற்றை விளக்குக.
- (i) குழல் *(05 புள்ளிகள்)*
- (ii) வீணை *(05 புள்ளிகள்)*
- (iii) புல்லாங்குழல் *(05 புள்ளிகள்)*
- (iv) மேளம் *(05 புள்ளிகள்)*

### பகுதி III

**6.** சோழர் காலத்துக் கோயிற் கட்டடக் கலையின் பிரதான அம்சங்களை விளக்குக. *(20 புள்ளிகள்)*

**7.** மதுரை மீனாக்ஷி அம்மன் கோயிலை அடிப்படையாகக் கொண்டு நாயக்கர் காலச் சிற்பக் கலையின் சிறப்புகளை ஆராய்க. *(20 புள்ளிகள்)*

**8.** ஆலயங்களை ஆதாரமாகக் கொண்டு பரதநாட்டியக் கலை தென்னிந்தியாவில் வளர்ச்சி பெற்றமையினைப் பரிசீலனை செய்க. *(20 புள்ளிகள்)*

**9.** மேல்வருவனவற்றுள் எவையேனும் நான்கினைப் பற்றிச் சுருக்கமான குறிப்புகள் எழுதுக.
- (i) ஐராவதேஸ்வரம்
- (ii) வானவன் மாதேவி - ஈஸ்வரம்
- (iii) பிச்சாடனர்
- (iv) கல்யாணசுந்தரர்
- (v) அபிநய தர்ப்பணம்
- (vi) சித்தன்னவாசல் ஓவியங்கள்
- (vii) மாமல்லபுரம்
- (viii) அபிநயம்

*(05 × 04 = 20 புள்ளிகள்)*

* * *

Department of Examinations, Sri Lanka